# அன்னைக் குலம்

இயற்கையாய் இதயத்தில் எழும் ஆசைகள் சில உண்டு - உண்மை. நமக்குத் தகுதியா, அவசியமா என்னும் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட அத்தகைய ஆசைகளை ஒடுக்கியடக்க வெளியார் உதவினால், பேதமையுள்ளத்திற்கு ஆறுதலும் உற்சாகமும் இருக்கும். ஆனால் வெளியார், அந்த ஆசைகளுக்கு உருவமளித்து, உயிரூட்டி வளர்க்கவே முன் வருகின்றனர்!

எனக்குக் குழந்தை இல்லை. ஆனால், என் கணவருக்கும் எனக்கும் மனதில் குறையில்லை. நான் பெண். பெண்ணாகப் பிறந்துவிட்டதனால், குழந்தை ஆசை சற்று உண்டு - ஆனால் குழந்தையில்லையே என்னும் கவலை லவலேசமும் கிடையாது. எங்களுக்கு இல்லாத கவலையும் குறையும், எங்களைச் சார்ந்தோரிடம் தோன்றி வளர்ந்தன! சுவீகாரம் கொள்ளும்படி எங்களை வற்புறுத்தி, அச்சுறுத்தத் தொடங்கின!

அக்கம்பக்கத்தவர்களும், நண்பர் உறவினரும், "சீக்கிரம் பிறக்கட்டும்!" என வாழ்த்தினர். நான் சிரித்தேன்: "என் அருமை மக்களே! நீங்கள் மெல்லப் பிறக்கலாம்! அவசரமேயில்லை! உங்களுக்கு முதலில் நல்வரவு கூற, நாங்கள் - உன் அப்பாவும் அம்மாவும் நிறையப் பொருளீட்ட அவகாசம் தாருங்கள்! நீங்கள் உயர்வுடன் வளர்ந்து வாழலாம்! அதிர்ஷ்டக் குழந்தைகளாகப் பிறந்து உங்களுடனே செல்வங்கொணருவதாகக் கூறுகிறீர்களோ? _சுட்டிச் சமர்த்துகள்தாம், நீங்கள்! செல்வக் குழந்தைகள்! வேறு ஒரு விஷயம் இருக்கிறது! உங்கள் அன்னை திடனும் தென்புமாக இருந்தாலன்றோ, நீங்களும் சிறப்புறலாம்! குறைந்துவிட்ட வலிவையும், மறைந்துவிடும் சுறுசுறுப்பையும், பலப்படுத்தாமல், உற்சாகத்தை வலிய வரச்செய்தவாறு நான் வளையவருகிறேன் இப்பொழுது. வீட்டில் சாமான்கள் வைத்தது வைத்தபடி ஒழுங்காகவும், அமைதியாகவும் இருக்கும் இந்நிலைமையிலே, நான் வேளைக்கு ருசிருசியாய்ச் சமைத்துப் படைக்கும்பொழுதே, நான் கணவரின் பாராட்டு மொழிகளைக் கேட்க முடியவில்லையே? 'இதென்ன, வெட்கக்கேடு - குழந்தைகளை வெருவும் நான் எதற்கு பிறவாத குழந்தைகளுடன் பேசிக் கொஞ்ச வேண்டும்?' என யாரும் கேலி செய்ய முடியாது - நான் குழந்தையை வெறுக்கவில்லையே? என் நிலைமையில் நான் அவற்றை வெருவினேன் - அவ்வளவே"

என் அன்னைகூட வெளியார் கோஷ்டியில் கலந்தாள்! என் மதனி தாயாகப் போகிறாளாம். அம்மா, என் விஷயத்தில் தான்படும் வேதனையைக் குறிப்பிட்டு எழுதினாள்.

மதனி உமாவுக்கு என் மகிழ்ச்சியை அறிவித்து வாழ்த்தினேன். உமா பதிலே போடவில்லை. அண்ணாவிற்கு எழுதிக் கேட்டதற்கு, அவன் எத்தகைய மறுமொழி அளித்தான்?

அண்ணா அன்னைக்குக் கூட எழுதியிருக்கமாட்டான் - தன் தங்கையான எனக்குத்தான் மனசுவிட்டு எழுதியிருப்பான் - என நினைக்கிறேன். "உனக்குப் பிறக்குமாயின் எத்தனை உவகையாயிருக்கும் தெரியுமா? கடவுளுக்கு ஏனோ இந்த வக்ர புத்தி! மனிதர்களுக்கும் புத்தி வக்ரமாகிறது! போன வருடம் கலியாணம் இந்த வருடம் குழந்தை என்று உன் அண்ணி மனம் புழுங்குகிறதைப் பார்க்கையில் வருங்காலம் இருள்கிறது எனக்கு. அவள் மீது விழவிருக்கிற பெரும் பொறுப்பினைத் தாங்க நான் தயார் - எனினும் அன்னையின் பராமரிப்பிற்கு ஈடாகுமா? குழந்தை பிறக்க நான்கைந்து மாதங்கள் கிடக்கும்பொழுதே அவள் அதைப் பகைக்கிறாள். என்ன தீவினை செய்ததோ அந்த ஜீவன்! நம் அன்னை இதை அறிவாளாயின் மனங்கசிவாள்!"

இக்கடிதம் மன்னியின்பால் எனக்குச் சினமூட்டிற்று. அண்ணனைத் தேற்றும் விடைக்காக இடைவிடாது சிந்தனையை அடைகாத்தேன். நான் கண்ட பலன்!

சினம் உடைந்து பிளந்தது அனுதாபம் பிறந்தது! எட்டு மாதங்களுக்கு முன்பு அண்ணா அண்ணி மணக்கோலங் கொண்டனர். உமா எனக்கு நான்காண்டுகள் இளையவள். அவள் 'தாய்மை'யை வெருவுகிறாள் என்றால் அது இப்பொழுது இயற்கைதான். வெருட்சி முற்றிவிடும் சமயங்களிலே வெறுப்புப் போல தென்படும்.

குழந்தை பிறப்பதை நானே வெருவுகிறேனாம் - உமாவைச் சொல்லிவிடலாமா? பொருளாதார நிலைமையும் வீட்டு வசதிகளும் இந்த ஊரிலுள்ளதைவிட அந்தப் பட்டணவாசத்தில் கீடகமாகவேயிருக்கும். நாங்களும் இரண்டே பேர்தான். வெளியில் போய் வர தடங்கல் கிடையாது. எப்பொழுதும் பிறரை வரவேற்கத் தயார் போல் துப்புரவாக வீடு விளங்க வேண்டும். எப்போதும் வெளியே கிளம்பத் தயார் போல் துல்லியமாக ஆடை துலங்க வேண்டும். இது என் கொள்கை. இதற்குமேல் அழகாக எவள் குடித்தனம் நடக்கும்?

ஆனால் என் கணவர் வீட்டை விட வீதியை அதிகம் நாடுகிறார், "வா, போவோம்!" எனக் கனிவுடன் என்னை அழைத்துச் செல்ல மட்டும் முன்வருவதில்லை. என் முறையீட்டிற்கிணங்க அழைத்துச் செல்லும் சமயங்களிலே, நான் அவரிடம் எதிர்பார்க்கும் குதூகலம் புலப்படுவதில்லை! நான் விரும்பும் அற்பப் பொருள்களைக் கூடப் பெருஞ் செலவுகளாகக் காட்டுகிறது. பொருளாதார நிலைமை. என்னை உடனழைத்துச் செல்வதையே அவர் ஒரு சுமை போல கருதினால்? . . . "அன்பை வெளியிட என்னால் முடியாது! மண வாழ்க்கைக்கு நான் லாயக்கற்றவன் போலும்!" என ஒரு நாள் அலுத்துக் கொண்டார்! கணவனாக இருப்பதற்கே அருகதையல்லவாமே! தந்தையாக இருப்பதானால்?

என் நிலைமையே இப்படி! உமா? கணவனை நன்குணருமுன்பே, அவனுக்கு முழு திருப்தியும் ஏற்படும் வகையில் சமையலும், குடித்தனப் பொறுப்பும் பழகு முன்பே, குழந்தையுடன் அல்லலாட நேரப் போவதை அச்சமின்றி எப்படி வரவேற்பாள்?

அண்ணா தன் மனைவியின் பால் மனங் கசந்துவிடாமலும், எனக்கு நாத்தி ஸ்தானத்தின் பொல்லாங்கு வராமலும், நல்ல பதில் எழுதிப் போட்டேன்.

உமாவின் உடல் நிலையை நான் எய்தாத பொழுதே, நான் அவளுடைய மனநிலையை அடைந்துவிட்டதை விளக்கி, கடவுளுக்கு இந்த சிருஷ்டியில் வக்ர புத்தியே இல்லை என்பதை ஸ்தாபித்தேன். குழந்தையைப் பேணுவதிலே உமாவுக்கு இருக்கக் கூடிய பொறுப்புக் குறைவை ஈடுகட்டும் மனப்பான்மை அண்ணாவிற்கு இருக்கிறது - கடவுள் மகவை அவர்களிடை தோற்றுவிக்கிறார்! எங்களுக்குப் பிறக்குமாயின் என் சக்திக் குறைவை நிறை செய்யும் மனப்போக்கு என் கணவருக்கு உண்டோ? வெகு நாள் மோனத்திற்குப் பின் அண்ணா, முற்றும் மாறிவிட்டதொனியில், மனைவியின் உற்சாகத்தையும், அவள் வன மகோற்சவம் பொருட்டு பூந்தொட்டிகள் பயிர் செய்வதையும், சந்தோஷமாக உலவுவதையும் விளக்கி, என்னை வியப்பிலாழ்த்தினான். என்னுடைய வியப்பு, உமாவின் 'பூச்சூட்டல்' 'சீமந்தம்' சடங்குகளின் போது, அடங்கிற்று. அண்ணாவின் அன்பும், ஆதரவும் அவன் 'தயார்' தான் என விளக்கும் பொழுது, உமா, 'தாயார்' ஆவதற்கு அஞ்சுவானேன்?

உரிய காலத்தில் மன்னிக்கு மகள் - எங்களுக்கு மருமகள் பிறந்தாள். மகிழ்ந்தோம். மகவை வாழ்த்தினோம். எங்களுக்குப் பொறாமை கிடையாது. மகவில்லா மனக்குறை இருப்பினன்றோ பொறாமை எழும்? எங்களைப் பற்றி எங்களிடம் அங்கலாய்ப்பவர்கள், "நாட்டில் ஜனத்தொகை குறையணுமாம், நினைவிருக்கட்டும்!" என நாங்கள் எச்சரிப்பதை போலி வீரம் என நினைக்கலாம்! "எங்களுக்கு இல்லாத கவலை ஏனோ?" என நாங்கள் வினவுவதையும், "இந்த சம்சாரமே பெரும்பாரமாகிறது!" என நாங்கள் சொல்வதையும் 'தற்காப்பு' என மதிக்கலாம். ஆனால் அந்த ஏளனம், அவர்களுடைய தோல்வியின் குழந்தை!

வயதில் பெரியவர்கள் ஆசிகளாகப் பொழிந்தனர். சிறியவர்கள் - அனுபவத்திலே என்னை மிஞ்சிவிட்ட பெருமிதத்துடன் வாழ்த்தினார்கள். அனுபவம் போதாத சின்னவர்கள் ஆசைகளை

வெளியிட்டார்கள். அவர்கள் தங்கள் இயற்படி, தங்கள் நோக்கிலே என்னை நிலைநிறுத்தினர். நான் அவர்களை குறை கூறுவது அழகல்ல. அறுபது வயதுப் பெரியவர்கள் ஓடிச்சாடி வளைய வருவதையும், என்னைவிட ஏழ்மை நிலையிலே வசதிக் குறைவுகளுடன் வீட்டில் மக்களுடன் குடித்தனம் நடத்தும் பெண்களின் தெம்மையும் நான் கண்டு மலைக்கிறேன். சிறிதும் கலையாத உறக்கத்தினால் எனக்கு எத்தனை தெளிவு இருக்கணுமே? உஹும் கிடையாது. தயிர் பால் வசதிகள் இருந்தும் எனக்கு சோர்வும் அசதியும் தான். இதையெல்லாம் பிறத்தியாரிடம் எத்தனை தடவைதான் சொல்லிக் கொள்ள இயலும்? என் மனம் அவர்களிடம் இருக்கும் சிறப்புக்களை பாராட்டுகையில் அவர்கள் மட்டும் ஏன் என் உயர்வுகளைப் பார்ப்பதில்லை? இது ஒன்றுதான் என் ஏக்கம்.

அழுக்குப் பன்றி கூட ஒரு ஈற்றிலே பத்து குட்டி போடுகிறது. பன்றிக்கு உலகத்திலே ஏது உயர்வு? கனி தராத மரமும், பூவீயாத செடியும் வளர்ச்சி வீண் என்று மலடாக நிற்பதை யாரும் விரும்புவதில்லை. ஆனால் அவைகூட மழையின் உற்பத்திக்கு 'அணில் உதவி' புரியக்கூடும்! போகட்டும், மனிதன் ஆறறிவு படைத்தவன். பெண், பொன்தான் - எப்படியிருப்பினும் - வீண் அல்ல. நான் மற்ற எத்தனையோ அம்சங்களிலே பிறரை மிஞ்சுகிறேனே? 'குழந்தையில்லாததால் நீ என்ன தாழ்ந்து போனாய்?" என்று என்னை மனமாரப் பார்ப்பவர் ஏன் இல்லை?

அதோ, அருநெல்லிமரம்! அதிலே நாலு கொத்துக் கனிகள் - மரம் முழுவதும் அடர்ந்து பசுமையான இலைக் கூட்டம். ஆனால் முதலில் கண்களை இழுத்துப் பிணைப்பவை அந்தக் கனிகள் தாம்! மரத்திற்கு விளம்பரம் கனி! பெண்ணின் பெண்மைக்கு விளம்பரம் குழந்தை.

வேற்றூருக்கு மாற்றலாகிப் போகும் வழியிலே எங்கள் நாத்தனார் குடும்பம் எங்கள் ஊரில் ஒரு வாரம் தங்குகிறதாக கடிதம் வந்தபொழுது எனக்கு ஒரே மலைப்புத்தான். நாத்தனாரின் அட்டகாச அதிகாரங்களுக்கும் ஆணவமான பேச்சுக்கும் சில வருஷங்களுக்கு முன்பு இலக்காகியிருந்த நான், பீதியடையாமல் மகிழ முடியுமா? மலைத்து மாய்ந்து போனேன். ஆனால் அவர்கள் வந்த பின்னர் . . . . .

நாத்தனாருக்கு இரண்டு குழந்தைகள் - அவற்றைப் பெற்றவர் நாத்தனார் - வயிற்றிலும் ஒரு மகவு இருக்கிறது அவருக்கு. இதையெல்லாம் கண்டு என் மலைப்பு நழுவிவிட்டது. என் சோர்வு கஷ்டம் எல்லாம் மூட்டை கட்டி மறைத்து ஒதுக்கிவிட்டு விருந்தாளிகளை கவனித்தேன். மின்சார விசிறி போலச் சுழன்றேன். பிற்பகல் தூக்கமில்லை. வேலையும் மிகுதி - எனினும் வெற்றிகரகமாகச் சமாளித்தேன். போகும்பொழுது நாத்தனார் "உனக்குச் சீக்கிரம் பிறக்க வேண்டும். எனக்கு இந்த விசை நீ வந்து நடத்திக்கொடுத்துவிட்டுப்போ - அம்மாவிற்குப் பதிலாக கட்டாயம் உனக்கும் பலன் ஏற்பட்டுவிடும்!" என்று ஆசை காட்டுவது போல ஆசி கூறினார் சற்று துணுக்குற்ற நான், "அத்தகைய பலன் ஏற்படுமானால், நான் உதவிக்கு வரவே பயப்படுகிறேன். அக்கா!" என்று சொல்லிவிட்டேன்!

புனிதமான பணிதான் - மகப்பேறு சமயம் உதவி செய்வது விசேஷம் தான்! என்னால் அது சாத்தியமா? இந்த ஒரு வாரம் நான் கடைபிடித்த பொறுமை போதும்! இந்த ஒரு வாரமும் உழைத்ததற்கு இளைப்பாற நான் பம்பாய் அன்றோ போக வேண்டும்? அண்ணாவின் வீட்டில், உமாவின் உபசரணைகளாலே தெம்புற வேண்டும்?

கணவரிடம் இதைத் தமாஷாய்ச் சொன்னேன். அதற்கு அவர், 'அண்ணா மதனி, அப்பா அம்மாவிற்குச் சமம் என்பார்களே - உனக்கு இரண்டு இடங்களும் இருக்கின்றன - பிறந்தகம் சீராடிவிட்டு வரலாமே!' என்றார். ஒருக்கால் கோபமாகக் கூறுகிறாரோ என ஐயுற்ற நான், "போய்வர கொள்ளைச் செலவு ஆகிவிடும் - அதற்கு - சமையல் ஆள் போட்டுக் கொண்டு இங்கேயே ஒரு மாதம் சீராடிவிடுகிறேன்!" என்று சொல்லி வைத்தேன். வேடிக்கைக்குச் சொல்வதாகத்தான் என் நினைப்பு! ஆனால், அவர் அப்படி நினைக்கவில்லை! "கார் சவாரி, ஊட்டி வாசம், ஆள் அம்பு எல்லாத்துக்கும் தாக்குப் பிடிக்க உனக்கு ஒரு லட்சாதிபதி

வாய்க்காமற் போனான்! ஹும், இரண்டு பொருத்தமில்லா காளைகளை வண்டியிலே பூட்டியாச்சு, வண்டி போய்த்தானாகணும்!" என்று பதிலளித்தார்! காளைகள். என்ன வார்த்தை. பிறர் நாவுகளிலே இது நாள் வரை நெளிந்தது. பெண் குலத்திற்குச் சிறப்புப் பட்டம் அன்னைக் குலம். அந்தச் சிறப்பிற்கு - நான் உரியவளாகவில்லை. அருகதையிம் அல்லள் - என்பதை என் கணவரே சுட்டிக் காட்டவும் கூடுமா?

அதோ தொட்டியிலே நான் நட்டிருந்த துளசி! இரண்டு கொத்து நட்டேன். இரண்டும் ஓங்கி வளர்ந்துவிட்டன - ஆனால், அத்தனை உயரம் வளர்ந்தும், அழகு இல்லை, பசுமை இல்லை. எங்களையே குறிக்கிறது போலும் நான் நட்ட செடி!

தொட்டி மத்தியிலே, தொட்டியின் மண் தெரியும்படியாக இரண்டும் நெடிது வளர்ந்து, தாராளமாய்ப் பிரிந்து இடதும் வலதுமாகச் சரிகின்றன. அவற்றை நெருங்கி வைத்து அழகு செய்யும் வகையில் பசுமை சூழவில்லை. இந்த அழகற்ற உயரம் இன்றி, குஞ்சம் போல, சிறு புதர்போன்று, தொட்டி முழுதையும் நிறைத்துக் கொண்டு வளர்ந்திருக்க வேண்டும். ஆனால், நான் நட்ட செடி அப்படி வளரவில்லை! "துளசிக்குக் கோலமிட்டுக் குங்குமமிட்டு விளக்கேற்றி கும்பிடடி அம்மா, வீண் போகாது!" என்னும் புத்திமதியை என்னுடைய பதினைந்தாம் வயதிலே, எனக்கு மணாளன் கிடைக்கும் பொருட்டு ஒரு பாட்டி சொன்னார்! இன்று வேறொரு மூதாட்டி எனக்கு மகவு பிறப்பதற்காக ஓதுகிறார். வரட்டு மிளகாய்ப் பொடியின் நெடி, நம்மை விரட்டுகிறது. ஆனால் அந்தப் பொடியினூடே சின்னஞ்சிறிய புழுக்கள் உற்பத்தியாகி வாழும் விந்தை! "சமாளிப்பாயா?" ஆனால் ஆசை தழைக்கிறதே!

என் கணவர் மட்டும் என் அண்ணாவைப் போல கனிவில் தோய்ந்த அன்பினைச் செலுத்துபவராக இருப்பாராகில், நான் இந்தப் பாழும் மலைப்புக்கு இலக்காவேனா?

மன்னி உமா, கொள்ளை கொள்ளையாய் கம்பளிச் சட்டைகள் பின்னுகிறாளாம் - குழந்தைகளுக்குப் பலவிதமாகப் பின்னி அணிவிக்கிறாளாம். அதுமட்டுமா? "நாத்தனார் ஆகிய உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால் போடலாம் என்று ஆசை - தற்சமயம், என் நாத்தனாருடைய நாத்தனாருக்கு இருக்கும் இரண்டு குழந்தைகளுக்கு இந்த இரண்டும் அனுப்பியிருக்கிறேன்!" என்று இரண்டு கம்பளிச் சட்டைகளை அனுப்பினாள் உமா! அண்ணா, தன் மனைவி மக்களைத் தாங்கும் தாங்கல், உமாவிற்குப் பெருமையளிப்பதாய் இருக்கிறது!

உமா பல பக்ஷண வகைகளும் அனுப்பினாள். எப்படி கற்றாளாம் அவற்றை? "யார் வீட்டில் எது செய்தாலும் நான் அதை உடனே செய்தாகணும்! இந்த வாண்டுப் பெண் உத்தரவு! கோலி அப்புச்சி, வெள்ளை மிட்டாய் என்று அடையாளம் எல்லாம் சொல்வாள்! அடிக்கடி செய்து பழக்கமாகிவிட்டது!" என்று பெருமிதமுடன் எழுதுகிறாள்! "தீபாவளிக்கு என்ன செய்யப் போகிறாய்?" என்று யாராவது கேட்டால் நான் கசந்து கொள்வதையும், "ஏதோ செய்து தீபாவளியை முடித்தோம் என்று இருக்கவொட்டாமல் செய்யும் கேள்வியல்லவா இது?" என நான் அருவருப்பையும் நானே எண்ணிக் கூசினேன்!

உமா அனுப்பிய கம்பளிச் சட்டைகளையும் பக்ஷணங்களிலே ஒரு பகுதியையும் நான் நேரில் போய்க் கொடுக்க திட்டமிட்டேன். "லைன்மேன்" மூலம் அனுப்பிவிடும் யோசனை மறுத்தேன். "எனக்கு எங்கேயாவது போய் வரணுமொன்றிருக்கு!" என்று வற்புறுத்தி, இருவருமாகக் கிளம்பினோம். போய்ச் சேர்ந்ததும் அலுப்புப் பாராமல் விருந்தாளி என்னும் ஹோதாவில் நிற்காமல், அந்த இல்லத்திலே உறவாடினேன். மருமகன் என்னிடம் அண்டாமல் கணவரைக் கட்டி வளைப்பாள். அப்பொழுது என்னைப் பார்த்து அவர் முறுவலித்தார்! சிலசமயம் கிறுக்கு செய்து அவரை அணுகாமல் என்னை அணைப்பான் பயல் அப்பொழுதும் அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்!

மீன் தன் கண்ணோக்கினாலேயே குஞ்சுகளைப் பொரிக்குமாம்! அன்னை மீனாட்சியின் அருள்நோக்கு, மக்களை உய்விக்கும் கண்ணோக்கு, என் கணவரின் பார்வையில் குடிபுகுந்துளதோ?

"குளிப்பாட்டிக் கொடுத்துவிடு நான் சட்டைப் போடுகிறேன்!" என்று மருமகனின் உடுப்பும் கையுமாய் பத்து நிமிஷம் காத்து நிற்கும் ஆர்வம் என் கணவரிடம் தென்பட்டது அதைவிட அதிசயம்! "பலே ஜோர்!" என அரைத்துச் செய்யாத உண்டி பாராட்டும் பெற்றது! "நீ பெஞ்சியிலிருந்து உருட்டிவிடப் போகிறாயே அவளை" என்று நானும் அடிக்கடி எழுந்து கவனித்தேன். நீ என்னடா என்றால், குழந்தை இந்தண்டை அந்தண்டை அசைந்தாலே விழித்துக்கொண்டிருந்தாய்! அடித்துப் போட்டாற்போல தூங்குவாயே நீ! எப்படி விழிப்புக் கொடுத்தது உனக்கு?" என்று வியப்பும் மகிழ்ச்சியும் மேலிட அவர் கேட்டபொழுது, நான் இது நாள் உணராத உண்மையை உணர்ந்தேன். மந்த புத்தியின் உறக்கம் தெளிந்துவிட்டது. சோர்வற்ற விழிப்புப் பெற்றுவிட்டேன். சுயநலப் போர்வை சுருண்டது.

புனிதமான பணியை எங்களகத்திலேயே நடத்த என் கணவரின் தங்கையையும் மக்களையும் உடனழைத்துச் செல்ல முடிவு செய்துவிட்டேன். அன்னைக்கு மேலாக என்னைக் கருதி, அன்று உதவிக்கு அழைத்த நாத்தனார் எனக்கு எத்தகைய உயர்வு வைத்திருந்தார்? அதை நிறைவேற்றுவது என் மகிழ்ச்சி மிகுந்த கடமை.

பயன்தரும் பசுவாக நான் விளங்காவிடினும், காளைபோல் விளங்கவும் விரும்பவில்லை. அன்னைக் குலத்திற்குரிய உணர்ச்சிகளின் உயர்வு இருந்தாலே போதும் என்று ஆசைப்படுகிறேன்.

**********

(சுதேசமித்திரன், March 25, 1952)